**ஹிங்குரக்கொட பிரதேச பிரதேச சபை - 2022**
-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | LDSP கருத்திட்டத்தின் கீழ் தயாரித்து பூர்த்தி செய்ய ரூபா 4,856,034 பெறுமதியான பாதை நிர்மாண பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | நிலையான சொத்துக்களில் பெறுமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | LDSP கருத்திட்டத்தின் கீழ கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,303,000 பெறுமதியான 49 சோலா வீதி விளக்குகளை மீளாய்வாண்டு சொத்துக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு ஊடாக கணக்கீடு செய்துள்ளதென. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 149,250 ஆன 05 புல் வெட்டும் இயந்திரங்கள் மற்றும் 120 அம்பியர் 04 உலர் களங்கள் உள்ளளிட்ட 22 உறுப்படிகளிற்குரிய ரூபா 624,525 கிரயமான உபகரணங்கள் குறித்த | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | பிரதேச சபை நிதியம் மற்றும் ஏனைய அரச ஏற்பாட்டின் மீது மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 22,276,087 பெறுமதியான வீதிகள், பாலம் மற்றும் மதகுகள் மற்றும் ரூபா 7,505,942 ஆன கட்டிடங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் குறைந்து காண்பிக்கப்பட்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய ரூபா 765,500 ஆன கீழ்க் குழாய்களின் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | LDSP கருத்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 102,875 பெறுமதியான நுகர்வுப் பண்டங்களை இருப்புக்களின் உட்படுத்தியிருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (எ) | பிபிதெமு பொலன்னறுவ கருத்திட்டத்தின் கீழ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட கோள் மண்டபத்தின் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது ரூபா 1,000,000 பெறுமதியான மலசலகூடத் தொகுதி நிர்மாண கிரயம் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 289,670 பெறுமதியான சொத்துக்கள் குத்தகை வழங்கல், வருமானத்திற்கு இனங்காண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் முன்வைக்க வேண்டும். |
| (ஐ) | இயந்தி உபகரணங்களை குத்தகைக்கு வழங்கும் பதிவேட்டின் பிரகாரம் நிலுவையாக காணப்படும் ரூபா 325,080 ஆன நிலுவை வருமானத்தை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை. | ரூபா 325,080 தொகையை கணக்கீடு செய்ததென. | கணக்குகளை சரியாக முன்வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | உள்ளூராட்சி ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 திகதி வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 2019/02 பிரகாரம் காட்டியுள்ள பெறுமானத் தேய்வு விகிதத்திற்கு சொத்துக்களை பெறுமானத் தேய்வு செய்யாததால் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு ரூபா 90,636 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான விகிதத்தில் பெறுமானத் தேய்வு கணக்கிட நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஓ) | 2020 ஜுன் 11 திகதி பற்றுச் சீட்டிலக்கம் 621 மூலம் வைப்புச் செய்திருந்த ரூபா 64,843 ஆன கைத்தொழில் வைப்பொன்று நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது. | விடுபட்ட வைப்புப் பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்ததென. | -மேற்படி- |
| (ஔ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,316,494 ஆன செலுத்த வேண்டிய நானாவித கடன்கொடுனர் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ததென. | -மேற்படி- |
| (க) | சபையினால் ஈட்டிக் கொண்ட வருமானத்திலிருந்து திருப்பி செலுத்தப்பட்டிருந்த ரூபா 247,785 ஆன கொடுப்பனவு பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டிய சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதென. | -மேற்படி- |
| (கா) | பிரதேச சபையினால் ஹிகுரங்கொட நீதவான நீதிமன்ற வளவில் நிர்மாணித்த சட்டத்தரணி அலுவலக வளவிற்குரிய காணியில் நிர்மாணித்திருந்த 16 கடையறைகளிற்காக அறவிட வேண்டியதாக இருந்த டென்டர் கட்டணமான ரூபா 3,465,325 மற்றும் மாதாந்தம் அறவிட வேண்டிய வாடகை தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (கி) | பிரதேச சபைக்கு சொந்தமான கட்டிடமொன்றை பிரதேச பொறியியல் அலுவலகத்திற்கு வழங்கியதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 730,000 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | உத்தியோகபூர்வ இல்ல வாடகை ரூபா 240,900 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்காததுடன், அதற்குரிய நிலுவை வருமானம் ரூபா 34,600 நடைமுறை சொத்தின் கீழ் காண்பித்திருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டதென. | -மேற்படி- |
| (கு) | நிலுவை மலசல கழிவுக் கட்டணத்தை கணக்கீடு செய்யும் போது ரூபா 31,300 ஆன முற்பெறுவனவு மலசல கழிவுக் கட்டணம் ஆண்டு வருமானத்திற்கு பதிலீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (கூ) | அரச மற்றும் நானாவித நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் மூலதன செலவின மானியத்தை ஒரே முறையில் வருமானத்திற்கு இனங்காணாது பெறுமானத் தேய்வு கணப்பிடும் அடிப்படையின் மீது விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் காண்பிக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் மூலத செலவின மானியமாக கிடைத்த ரூபா 37,444,096 ஆன மொத்தப் பெறுமதியை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடப்பதென. | -மேற்படி- |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு துணை பதிவெடுகள் மற்றும் நிதிககூற்றுக்களில் காண்பிக்கப்ட்டிருந்த செலுத்த வேண்டிய பொறுப்புக்கிடையில் ரூபா 3,815,003 ஆன இணக்கமின்மையானது. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளிடையில் இணக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெற வேண்டிய வருமானம் மீதி மற்றும் பெற வேண்டிய வருமான பதிவேட்க்கிடையில் ரூபா 1,784,692 ஆன இணக்கமின்மையானது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டு இருந்த கிடைக்க வேண்டியவை அதிகரிப்பு மற்றும் | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ஏனைய நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு ஆகிய பெறுமானங்கள் கணக்கீட்டு குறிப்புக்கள் பிரகாரம் சமர்பித்திருந்த பெறுமானங்களிற்கு இடையில் ரூபா 6,959,425 ஆன இணக்கமின்மையானது. | | |

**1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு ரூபா 60,180,574 பெறுமதியான 02 கணக்கு மீதிகளை மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வு மற்றும் நாளாதுவரையாக்கப்ட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | பதிவேடுகள் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதெனை. | கணக்காயிவிற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தேசிய அரச சபையின் 1978 இலக்கம் 41 கொண்ட நகர அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளை குறிப்பிட்டு வெளியிடப்பட்டிருந்த 2235/54 மற்றும் 2021 ஜுலை 08 திகதிய வர்த்தமானி | | | |
| VI அத்தியாயத்தின் 83(1) பிரிவு | 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை வணிக கட்டிடங்களிற்காக கட்டிட திட்டத்தை அங்கீகரித்து அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றிருந்த போதும், 51 நபர்களினால் இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. | இணக்கப்பாட்டு சான்றிதழை பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் சமர்பித்த போதும் பதில் வழங்கப்படவில்லையெனை. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்ப வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 42,743,575 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,106,562 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,854,319 | 10,793,144 | 10,115,549 | 2,850,403 | 9,253,005 | 8,043,777 | 9,325,820 | 2,172,808 |
| (ii) | வாடகை | 37,687,276 | 23,010,550 | 17,635,820 | 12,846,296 | 22,024,338 | 17,109,358 | 17,718,960 | 7,471,506 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,198,750 | 1,853,443 | 1,115,219 | 1,153,783 | 3,097,750 | 2,472,050 | 2,115,650 | 415,559 |
| (iv) | ஏனைய வருமானம் | 32,443,944 | 43,938,970 | 30,985,518 | 12,190,619 | 32,314,474 | 50,206,655 | 52,966,030 | (762,833) |
| | | 83,184,289 | 79,596,107 | 59,852,106 | 29,041,101 | 66,689,567 | 77,831,840 | 82,126,460 | 9,297,040 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும வரியும்** | | |
| (i) | 2022 ஆண்டில் ஹிங்குரங்கொட பிரதேச சபைக்கு சொந்தமான வீதவரி அறவிடப்படும் ஆதன எண்ணிக்கை 5968 ஆனதுடன், அவற்றில் 2661 ஆதனங்களின் வீதவரி நிலுவை காணப்பட்டது. | வீதவரி எல்லைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாததால் ஆதனத் தடை செய்ய முடியாதிருப்பதாக. | வீதவரி எல்லைகள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய கைத்தொழில் வரி ரூபா 144,620 யையும், வியாபார வரி ரூபா 265,495 ஆன தொகையையும், அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அறவிட இறுதிக் உத்தரவுக் கடிதம் அனுப்பியுள்ளதுடன், ரூபா 77,310 அறவிட்டுள்ளதாகவும், சட்ட நடவடிக்கை எடுக்க இருப்பதாக. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு சபைக்கு சொந்தமான 194 கடையறைகளில் இருந்து ரூபா 7,187,119 ஆன நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறைச்சிக் கடையொன்றிற்காக வழக்கு தாக்கல் செய்து, 04 கடைகளிற்காக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதெனவும், எஞ்சிய கடையறைகளிற்குரிய நிலுவை வாடகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதிற்கு 2016 முதல் இதுவரை கிடைக்க வேண்டிய இயந்திர வாடகை வருமானம் ரூபா 6,825,440 ஆனதுடன் அவற்றில் ரூபா 443,677 தொகை சபை அங்கத்தவர்களுக்கு வாடகை அடிப்படையில் இயந்திர உபகரணங்களை வழங்கியதற்காக அறவிட வேண்டிய வருமானமொன்றானது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (iii) | பிபிதெமு பொலன்னறுவ கருத்திட்டம், 2021 ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட போதும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக சபைக்கு அறவிட வேண்டிய தொகை ரூபா 2,041,448 ஆனது. | நிலுவை தொகையை அறவிட விபரங்களை மாவட்ட செயலகத்திற்கு வழங்கியுள்ளதென. | பின்னூடல் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 11,474,589 ஆனது. | பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | சபையின் கருத்துரைகள் |
|---|---|---|
| **திண்மக் கழிவு முகாமைத்துவம்** | | |
| 1987 இன் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 95 பிரிவு பிரகாரம் குப்பைகள், மலசல அல்லது அவ்வாறான பொருட்கள், துன்பம் ஏற்படும் விதத்தில் வெளியிடப்படுவது இல்லையென பொறுப்பேற்க தேவையான அனைத்து வேலைகளை திட்டங்கள் மற்றும் முற்பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டிய போதும், சபையினால் வெளிவிடப்படும் பொருட்கள் படுஓய ரத்மலே பிரதேசத்தில் இடமொன்றிற்கு வெளிவிடம் போது அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உக்கலடையும் கழிவுகள் லங்காபுற செயற்கை பசளை கொட்டிலிற்கும், உக்கலடையாத குப்பைகளை களஞ்சியப்படுத்தப் படுவதென. | சுற்றாடல் நேய திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| LDSP ஏற்பாட்டின் கீழ 2022 மார்ச் 16 திகதி ரூபா 2,303,000 செலவிட்டு 49 சோலா வீதி விளக்குகளை கொள்வனவு செய்து பிரதேச அங்கத்தவர்களின் கோரிக்கையின் பெயரில் குறித்த பிரிவுகளில் பொருத்தப்பட்டிருந்த போதும், அவற்றின் பாதுகாப்பிற்காக பொருத்தமான முறைமையொன்றை பின்பற்றி இருக்காததால் ரூபா 846,000 ஆன 18 வீதி விளக்குகள் காணாமல் போயுள்ளதாக தேடுதல் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கோரிக்கை மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் சோலா வீதி விளக்குகளை பொருத்தியதாகவும் அவற்றிற்கு பாதுகாப்பை வழங்க போதிய ஆளணியினர் இல்லையென. | வீதி விளக்குகளின் பாதுகாப்பிற்காக வேலைத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள மற்றும் நி.பி. பிரகாரம் இழப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு அலுவலர்களிற்கு 2022 ஆண்டில், ஒரு அலுவலரிற்கு 2010 ஆண்டில் வழங்கிய ரூபா 556,520 பெறுமதியான இடர் கடன் தொகையை வழங்கிய தினம் முதல் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 மார்ச் முதல் கடன் மற்றும் வட்டித் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதென. | காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை சரிசெய்து கொள்ளவும் கவனயீனம் அல்லது முறைகேடொன்று இடம்பெற்றிருப்பின் அதற்காக |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்ற முற்பட்ட 2020 ஆண்டில் பரிமாற்றக் கணக்குடன் 08 சொத்துக்ள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 27.15 மில்லியன் செலவிட்டு பிபிதெமு பொலன்னறுவ கருத்திட்டத்தின் கீழ் 2019 ஆண்டில் நிர்மாணங்களை பூர்த்தி செய்து பிரதேச சபைக்கு ஒப்படைத்த 92 கடையறைகளுடன் கூடிய ஹிகுரங்கொட புதிய பொது சந்தை கணக்காய்வு திகதியளவிலும் கடையறைகள் வாடகைக்கு வழங்கப்படாமல் 03 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக விளைவற்று காணப்பட்டதுடன், அதனூடாக சபைக்கு மதிப்பீட்டு வாடகையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக மாத்திரம் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 12,631,600 ஆனது. | வழக்கு நடவடிக்கை ஒன்று காரணமாக கடைகளை வழங்குவதனை இரத்துச் செய்துள்ளதென. | சட்ட அறிவுறுத்தலை பெற்றுக் கொண்டு தாமதமின்றி சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணகளிப்பொறுப்பும் நல்லாளுகையும் சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹிகுரங்கொட பிரதேச சபைக்கு சொந்தமான 05 நீர் உத்தேச திட்டங்களின் நீர் ஏந்து பிரதேசங்களில் நீர் சுத்திகரிப்பு செய்யப்படாததுடன் ஒரு மாதிரி பரிசோதனையை 2022 ஏப்ரல் 26 திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகால் சபையினால் மேற்கொண்டிருந்த போதும், அந்த நீர் குடிப்பதற்து பொறுத்தமானதா என்பது தொடர்பாக பரிந்துரைகள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் மாதிரி பரிசோதனை ஒன்றை மேற்கொள்ள விரைவில் நடவடிக்கை எடுப்பதென. | நீரை பரிசோதித்து தரம் தொடர்பாக நுகர்வோர்களை அறிவூட்ட வேண்டியதுடன் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |